**வாக்குமூலம்**

**கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், சிவகங்கை**

**வழக்கு எண். SC.No. 121/2015**

**வழக்கு சாட்சி: PW.7**

**தேதி: 07.06.2023**

| | | | |
|---|---|---|---|
| **பெயர்:** | **விஸ்வநாதன்** | **ஜாதி:** | |
| **தந்தை பெயர் :** | **ராமைய்யா** | **தொழில்:** | **விவசாயம்** |
| **கிராமம்:** | **டி.அதிகரை** | **சமயம்:** | **இந்து** |
| **தாலுகா:** | **திருப்புவனம்** | **வயது:** | **54/2023** |

(2வது எதிரி ஆஜர் இல்லை, 2வது எதிரி சார்பில் கு.வி.மு.ச பிரிவு-317ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. 1, 3 முதல் 6 எதிரிகள் ஆஜர்.)

**முதல் விசாரணை:**

நான் தற்சமயம் சொந்த ஊரான டி.அதிகரை கிராமத்தில் குடியிருந்து விவசாயம் செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். கடந்த 31.07.2012ம் தேதியன்று செவ்வாய்கிழமை நானும் எனது மருமகன் ரவிச்சந்திரனும் மதுரைக்கு சென்றிருந்தோம். வண்டியை வேலை பார்ப்பதற்காக மதுரை போயிருந்தோம். மதியம் 12.00, 12.15 மணியளவில் தீபா எனக்கு அலைபேசி மூலம் சித்தலூரில் முத்துராமுவை மகாதேவன் வகையறா குத்திவிட்டதாக கூறினார். மதியம் 02.00 , 02.15 மணியளவில் நானும் ரவியும் இரு சக்கர வாகனத்தில் சித்தலூர் வந்தோம். அங்கு நாங்கள் வரும் போது முத்துராமுவை சிவகங்கை அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றுவிட்டதாக சொன்னார்கள். அங்கு போலீசார் இருந்தார்கள். என்னை போலீசார் விசாரித்தார்கள். வரைபடம் தயார் செய்தார்கள். கம்பு கைப்பற்றினார்கள். என்னிடம் கையெழுத்துப் பெற்றார்கள். என்னிடம் காட்டப்படும் அ.த.சா.ஆ.2ல் உள்ள 2வது கையெழுத்து என்னுடையது தான். இது சம்பந்தமாக காவல் ஆய்வாளர் என்னை விசாரிக்க நடந்த விபரங்கள் கூறினேன்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை:**

சித்தலூர் கிராமத்தில் 1000 அல்லது 500 பேர்கள் இருப்பார்கள் என்று சொன்னால் 500 பேர் இருப்பார்கள். நான் முத்துராமனுக்கு சொந்தக்காரர் என்பதால் அந்த ஊர்காரர்களை கூப்பிடாமல் வெளியூரிலிருந்து வந்த என்னை சாட்சியாக போட்டிருக்கிறார்கள் என்று சொன்னால் சரியல்ல. நான் சொன்னது

போல் பார்வை மகஜர், வரைபடம் சம்பவயிடத்தில் வைத்து தயார் செய்யப்படவில்லை என்றும் காவல் நிலையத்தில் வைத்து தான் தயார் செய்யப்பட்டவை என்றும் சொன்னால் சரியல்ல. நான் காவல் நிலையத்தில் வைத்து தான் கையெழுத்து செய்தேன் என்றால் சரியல்ல.